## DEPOSITION OF WITNESS

**Crl.Misc.39**
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேவி கவுண்டர் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | கொளந்தா கவுண்டர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 14.3.2024.

A1 to A3 present.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம் ரோடு தானகுட்டி பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன சின்னுசாமி என்னுடைய தங்கையின் கணவர் ஆவார். அவர் டிவி மெக்கானிக்காக வேலை செய்து வந்தார். சின்னுசாமியின் மனைவி சின்னுசாமி இறப்பதற்கு முன்னரே இறந்துவிட்டார். சின்னுசாமிக்கு 2 மகன்கள். ஒருவர் பெயர் ரமேஷ், மற்றொருவர் பெயர்

சந்திரசேகர். ஆஜர் 1வது எதிரிதான் சந்திரசேகர். சாட்சி ரமேஷ் சின்னுசாமியுடன் குடியிருந்து வந்தார். எதிரி சந்திரசேகரும் அதே வீட்டில் ஒரு அறையில் குடியிருந்து வந்தார். சின்னுசாமியிடம் சொத்தை பிரிக்க சொல்லி எதிரி சந்திரசேகர் கேட்டார். சந்திரசேகர் அவரது மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டார். சந்திரசேகரும் அவருடன் 2 பேரும் சின்னுசாமியின் வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்றும், 2018ம் வருடம் ரமேஷ் இரவு 10.00 மணி அளவில் தன்னுடைய தகப்பனார் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார். இரவு 11.00 மணி அளவில் நான் சென்று பார்த்தேன். சின்னுசாமிக்கு மூக்கில் ரத்தக்காயமும், கழுத்தில் இறுக்கிய காயமும் இருந்தது. அருகில் இருப்பவர்கள் சந்திரசேகரும் இன்னும் 2 பேரும் பகல் 3.00 மணிக்கு வீட்டிற்கு வந்ததாகவும், பேசிக்கொண்டார்கள். சம்பவ இடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை;</u>

2012ம் ஆண்டிலேயே சின்னுசாமியும் அவரது மகன்களும் சொத்தை பாகம் செய்து கொண்டு பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சின்னுசாமி இறப்பதற்கு முன்னரே யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கும் சின்னுசாமிக்கும் அதிகமாக போக்குவரத்து கிடையாது என்றால் சரி. நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு போனேன் என்றால் சுமார்

11.00 மணிக்கு போனேன். அப்போது போலிசார் இருந்தார்கள் என்றால் சரி. அப்போது போலிசார் யாரை சாட்சியாக போடலாம் என்று கேட்டார்கள் என்றும் ரமேஷ் என்னை சாட்சியாக போடலாம் என்று சொன்னார் என்றால் சரி. ரமேஷ் என் வீட்டிற்கு வருவார் என்றால் சரி. தற்போது அவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரி. தற்போது அந்த சொத்தை ரமேசும் சந்திரசேகரும் விற்றுவிட்டார்கள் என்றால் சரி. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் ரமேஷ் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்ததைதான் சொல்கிறேன்.

2 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் 1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.